


நகர் ஊரமைப்புத்துறை (DTCP)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்
கவுண்டச்சிபுதூர் ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம் \ தாராபுரம் ஊராட்சி ஒன்றியம் ,கவுண்டச்சிபுதூர் ஊராட்சி மற்றும் சித்தராவுத்தன்பாளையம் கிராமம் , க.ச.எண். 253/18 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்பம் எண் : **BRJG2SPO** நாள் : 31.01.2024
அளவு கோல் : 1:800

வ

குறிப்பு :
மனைப்பிரிவின் பரப்பளவு : 1.13 1/2 ஏக்கர் (அ) 4600.00 ச.மீ
மனைப்பிரிவு எல்லை :
நிலையிலுள்ள சாலை/
அணுகுசாலை :
ஒதுக்கிய மனைகள் : 22

பொது ஒதுக்கீடுகள்
உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :

1.மனைப்பிரிவின் சாலை பரப்பு = 986.20 ச.மீ
2.பூங்கா
ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு = (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x10%
= (4600.00 - 986.20) x 10% = 361.38 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு = 377.01 ச.மீ (10.43%)

iii)பொது உபயோகம்
A).உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = ((மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவுசாலைகளின் பரப்பு) x0.5%
= (4600.00 -986.20) x 0.5% = 18.06 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 59.70 ச.மீ (1.65 %)

B).TANGEDCO -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = ((மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவுசாலைகளின் பரப்பு) x0.5%
= (4600.00 - 986.20) x 0.5% = 18.06 ச.மீ
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = 38.13 ச.மீ (1.05%)

மூலை முடக்கு :
12.0 மீ வரை அகல வரையிலான சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ -ம் விடப்படல் வேண்டும் .
கட்டிட வரம்பு :
9.0 மீ அகல வரையிலான சாலைகளுக்கு 1.5மீ -ம் விடப்படல் வேண்டும் .
9.0 மீ முதல் 18.0மீ அகல வரையிலான சாலைகளுக்கு 3.0மீ -ம் விடப்படல் வேண்டும் .

நிபந்தனைகள் :

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் : 04.02.2019 மற்றும் அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் : 31.01.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் .

2. அரசாணை எண்.181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020-மற்றும் அரசாணை எண்.141 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022-ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தோவையான தார் சாலை வசதி மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலைத்தொட்டி ,தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதி மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும் .

3. இம் மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் , எந்தத்துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் தலைவர் கவுண்டச்சிபுதூர் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும் .

4. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்குடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் ,சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும் .

5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வானையின் நகலோடு திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஒப்புதல் அளிக்கப்பட ஆனையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கவேண்டும் .

6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும் .

7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்டு யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர்ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் .

SWP/ DTCP/ TIRUPPUR / LAYOUT NO: 82 /2024

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்

Signature Not Verified
திரு. [illegible] செழியன்
வலராமாரி - III
Signed by Assistant Director
Location: Tiruppur
Date:2024.03.13 14:06:23

Signature Not Verified
Signed by Village Panchayat President
Location:Tiruppur
Date:2024.04.03 11:11:27

க.பத்மா
மேற்பார்வையாளர்